முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 741**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.10.2021**, சனிக்கிழமை

1. அறமெனும் சக்திகொண்ட வள்ளலே
அண்ணலாக வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
வரம்தந்து சுப்ரமணியப்பெருமான் யானும்
வழங்குவேன் அரங்கன் நீ கேட்க ஞான அறிவுரை ஆசி தன்னை
2. தன்னிலே பிலவ தரிவை திங்களில்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள், 09.10.2021 சனிக்கிழமை)
தவராஜனுக்கு பலம்கூட எடுத்துரைப்பேன்
மண்ணுலகில் அரங்கன் நாமஜெபம்
மக்களை மாற்றி ஞான வழி காட்டும்
3. காட்டுமே அரங்கன் தரும் அருளமுது
கலியுகத்தாரை மரணமில்லா பெருவாழ்வுக்கு அழைத்துச்செல்லும்
வாட்டமற அரங்கன் கொள்கையாம்
வள்ளல் தன்மை கொண்ட சன்மார்க்கத்தை
4. இட்டமோடு ஏற்று இந்த உலகமக்கள் பின்பற்றி வருகவருக
இந்த வையகமே ஞான யுகமாற்றம் அடையக்கூடும்
கூடாத மாச்சர்யங்கள் அனைத்தும் குருஅரங்கன் ஆசிபெற்று வருபவர்க்கு
ஈடேறாமல் விலகி இந்த உலகில் பெரும் பாதுகாப்பு உண்டாகும்
5. ஆகவே அரங்கனே கலியுகத்தின் சிறந்தஞானி
அரங்கன் வழிவருகின்ற தொண்டர் படைகளே
அழியாமை பெற்று இந்த கலியுகத்தில்
ஆறுமுகன் என் ஆளுமைக்கு உண்டான ஞான ஆட்சியை
6. ஞான ஆட்சிதனை படைத்து இனிதே
நல்லுலகம் மக்களுக்கு உண்டான பாதுகாப்பு மிக்க
அமைதி மேன்மைகொண்ட பூமியாக மாற்றி
ஞான யுகமாற்றங்களும் நடந்தேறக்கூடும்
7. கூடவே அரங்கனுக்குள் நித்தம் நித்தம்
குருபரன் யான் பெரும் சக்தி ஊட்டி வர
நாடெங்கிலும் அரங்கன் சன்மார்க்க சங்க கிளைகள்
ஞான கட்டமைப்பாக மாறி இனிதே

8. இனிதே உலகத்தில் ஞான ஆட்சிக்குண்டான வழிவகையை உருவாக்கி
எல்லா வகையிலும் ஞானவான்கள் தலைமைக்கு வந்து
அழியாமை பெற்ற மாந்தர்கள் மூலமாகவே
அறிவிப்பேன் ஞான ஆட்சிக்காலம் மலரும்

7. மலரவே அரங்கனை மண்ணுலகில்
மாதவசியாக என் சக்தியாக அவதாரம் எடுக்கவைத்துள்ளேன்
வளர்ந்துவரும் அரங்கன் தொண்டர் படைகள் மூலமாக
வையகத்தில் அற்புதம் நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–